முருகப்பெருமான் துணை

**மகான் கலிய நாயனார் அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**24.04.2021**, சனிக்கிழமை

1. அரங்க ஞானியே கருணையே
அழியாமை தரவந்த தவசியே
வரங்களை மலையாகக் குவித்து
வாரி வழங்கும் ஞான தேசிகனே
2. தேசிகனே உன்பலம் கூறி
தெரிவிப்பேன் யோகபிரசன்ன ஆசி
ஆசிபட பிலவ தகர் திங்கள்
அறிவிப்பேன் லாபதிகதி காரிவாரம்
**(பிலவ வருடம் சித்திரை மாதம் 11ம் நாள், 24.04.2021 சனிக்கிழமை)**
3. வாரமதில் கலியநாயனாரும்
வழங்குவேன் உலகநலம்பெற
பாரதத்தை முதன்மை தடமாக்கி
பாருலகையே மாற்றம் செய்வேன் என
4. மாற்றம் செய்வேன் என உலகில்
மாதவ பலம் கூட்டிவந்த
ஆற்றல் மிக்க அரங்கனுன்
அவதார நோக்கம் நிறைவேற
5. நிறைவே உலகமகா சக்திகள்
நிறைந்துமே ஓங்காரகுடிலை
குறைவின்றி காத்து வருக
குருவரங்கன் உன்பதம் பற்றி
6. பற்றி ஞானவழி வந்திட
பாமரனும் சூட்சும சித்திகண்டு
மாற்றம் பெறுவான் ஞானியாக
மகத்துவம் கூட இந்த உலகம்
7. உலகமே ஞானவான்கள் நிரம்பி
உயர்வான ஞானயுகம்தனை
பலமான அரங்கன் வரத்தால்
பழுதில்லா அடைந்து உயரும்
8. உயர் ஞானி அரங்கன் வழி
உண்மை வழியென உணர்ந்து
தயவாக மக்கள் தேடிவர
தருமத்தை அகிலமெங்கும் செய்து வர
9. செய்துவர மக்களின் சக்தி
சிறப்பான தரும சக்தியாகி
மெய்ஞான பலம் கூடியே
மண்ணுலகில் அரங்கன் வழிவழி

10. வழிவழி ஞானியர் படை
வளமுற வளர்ந்து வளர்ந்துமே
அழிவிலா ஆறுமுகன் காட்சி
அடைந்து தெளிந்து சிறந்து

11. சிறந்துமே ஞானயுகம் படைப்பர்
சித்திமிக்க ஞானிகள் ஆவர்
அறந்தாங்கியுள்ள ஞானிவழி அடைவர்
அறிவித்த யோகபிரசன்ன ஆசி முற்றே

—சுபம்—